(14)

விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

**அறிவிப்பு**

காந்தீய - சர்வோதய இலட்சியங்களுக் கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

மலர் 7 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 100) 1970ஏப்ரில்-மே | இதழ் 7-8

# காந்தீய அன்பர்களுக்கு அழைப்பு

காந்தீய தத்துவம் மிகப்பரந்தது. மனிதப்பிறவியின் பயன், காந்தீயத்தை உணர்ந்து நடப்பதாற் கைகூடும்.

கடவுளை அடையும் முயற்சிக்கு மனஅமைதி வேண்டும். வெள்ளை நிறத்தில் வேறெந்த நிறமும் தெளிவாகப் படிந்து புலப்படுவது போல, அமைதியடைந்த மனத்தில் கடவுளின் பேரருளும் தெளிவும் தண்ணளியோடு புலப்படும். ஆகையால், மனிதன்மன அமைதியை முதலிற் பெறவேண்டும்.

மன அமைதியின் தந்தை ஞானம். தனிப்பட்ட சுதந்திரம் தாய். ஞானத்தை மகாத்மாவின் போதனையாலும் தனிப்பட்ட சுதந்திரத்தைச் சுயதேவைப் பூர்த்தியாலும் பெற்றுக் கொள்ளலாம்.

இயன்றளவு உற்பத்தி யாக்கல், பண்டமாற்றுச்செய்தல், கூட்டுறவான நிர்வாகம் நடத்தல் என்பனவற்றால் சுயதேவைப் பூர்த்தியைப் பூரணப் படுத்த வேண்டும்.

'இராமராச்சியம்' தனிப் பட்ட மனித சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. கடவுளை அடையும் முயற்சிக்குத் தனிப்பட்ட சுதந்திரம் வேண்டு மென்றும், தனிப் பட்டசுதந்திரத்திற்குத் தேசசுதந்திரம் வேண்டுமென்றும் சுயதேவைத் திட்டத்துக்கு அந்நியராட்சி முட்டுக் கட்டை என்றும் உணர்ந்த காந்திஜீ, ஆரம்பமாக இந்திய சுயராச்சியத்துக்குத் தம்மைத் தியாகஞ் செய்தார்.

இந்திய சுதந்திரப்போரை நடத்தும் போது மனித வர்க்கத்கத்துக்குப யோகமான அநேக போதனைகளைப் போதித்தும் அநேக தொழில் முறைகளைச்செய்தும் காந்தியடிகள் உலகத்துக்கு மிகச்சிறந்த வழிகாட்டினார்.

இன்றைய உலகம் எல்லாத் துறைகளிலும் நிலைதவறி வெகுதூரம் பிழைத்து விட்டது எவ்விதசிறு ஒழுங்கும் இன்று சீராக இருக்கவில்லை. உலகம் முழுவதும் இருள் மயமாய் இருக்கும்நிலையில் காந்தீய ஒளிதோன்றியது. உலகம் கடைத்தேற வேண்டுமானால், மனிதன் கடவுளை அடைய வேண்டுமானால், காந்தீயமேசிறந்த வழியாகும்.

காந்தீயம், காந்தீயம் என்று சொன்னால் மட்டும் போதாது. தினந்தோறும் ஒரு மணி நேரமாவது காந்தீய போதனையைப்படிக்கவும் அவற்றை அனுட்டிக்கவும் பாடுபட வேண்டும். சர்வோதயம், கிராமராஜ்யம், காந்தீயம் ஆகிய பத்திரிகைகளும் சர்வோதய நூல்களும் எல்லாராலும் வாசிக்க வேண்டியவையாம். மேலைத்தேசவாசனையால் மதிமயங்கியமனித வர்க்கத்திற்குக் கருத்துப்புரட்சி ஏற்படவேண்டும். மேலே குறிப்பிட்ட பத்திரிகைகளும் நூல்களும் கருத்துப்புரட்சியை ஏற்படுத்தும்.

தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தைக் காந்தீய தத்துவத்துக்காக ஒதுக்குபவர்கள் காலக்கிரமத்தில் ஊக்கத்தைப்பெருக்கிக் கொள்கிறார்கள். இது உண்மையானாலும் அக்கம் பக்கச் சூழலால்தனித்த மனப்பான்மை ஏற்படுவதும் அதனால் சோர்வடைவதும் மனிதவியல்பாம். அதைப்போக்குவதற்கு, ஒரு பொதுக் கொள்கைக்குட் பட்டவர்கள் ஒரு சமுதாயமாகத் திரளவேண்டும். காலந்தோறும் கடவுளைத் தோத்தரிப்பவர்கள் உண்மையாகவே அக்கடவுளின் விசுவரூபத்தைக் கண்டு ஆனந்த முறுவது போல ஒரு மனப்பட்டவர்கள், சமுதாயத்தால் ஆனந்தமுறுவதையும் புத்தூக்கம் பெறுவதையும் எவரும் மறுக்க மாட்டார்கள்.

எனவே காந்தீய அன்பர்கள் தினந்தோறும் தவறாமல் ஒரு மணி நேரமாவது காந்தீயத்துக்குழைக்க வேண்டுமென்றும் சமுதாயமாகக் கூடிக்கலந்துரையாடி ஆனந்தமும் புத்தூக்கமும் பெற அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தில்அங்கத்தவராகச் சேர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

## கட்டடநிதி

காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்தமாக இரத்மலானை இந்துக் கல்லூரிச் சதுக்கத்தில் நிறுவப் பெற்றுள்ள சர்வோதய நிகேதனக் கட்டடம் சிரமதானம்மூலம் கூரை மட்டம் வரை கட்டப்பட்டுள்ளது. கூரைபோடுவதற்கு ரூபா 4500 வரை தேவைப் படுகிறது. தங்களாலியன்ற நிதியை உதவி கட்டடத்தைப்பூரணப்படுத்த ஆதரவு நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தீயம்

உருத்திரபுரம் (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி
காந்தி ஆண்டு 100
1970 ஏப்ரில்-மே

# நாமம் கெடல் வேண்டும்

உலகிலுள்ள சிறு பிரச்சினைகளும் சரி பெரிய பிரச்சினைகளும் சரி அடிப்படையான கருத்து வேற்றுமைகளால் எழுகின்றன என்பது உண்மை. வேற்றுமைகளால் பிரச்சினை எழுகின்றது ஆயினும் பிரச்சினைகள் தடித்துக் கோபத்தையும் பகைமையையும் எழுப்புவதற்கு வேற்றுமைகள் மட்டும் போதா. வேற்றுமையோடு தன்னைப்பற்றிய ஆணவமும் சேர்ந்தே பகைமைக்கு வித்தாகின்றன. இந்த ஆணவம் தன்னைச் சார்ந்த பல பண்புகள், கொள்கைகளில் ஊறித்தடித்த ஒரு அபிமானத்தாலேயே எழுகின்றது.

சிலர் தம் சாதி, இனம், மொழி, மதம், நாடு ஆகியவற்றில் ஓர் அபிமானமும் அசையாத பெருமிதமும் உடையவராயிருக்கின்றனர். தற்கால சமூக, அரசியற் கொள்கைகள் சமய விளக்க நூல்கள் இந்த அபிமானங்களை அரண் செய்து மக்கள் மனதில் குறுகிய விளைபுலங்களை ஏற்படுத்தி விடுகின்றன. அகண்ட பரிபூரணனாக விளங்க வேண்டிய மனிதன், பிறவிச் சூழலாலும் வளர்ச்சிச் சூழலாலும் தன்னை ஒரு குறுகிய கூண்டுக்குள் அடைத்து, தனக்கு ஒரு குறுகிய நாமத்தைக் கொடுத்து ஒரு சிறிய மனிதனாக்கிக் கொள்கின்றான்.

இந்த சாதி, மத, மொழி வேற்றுமையால் வரும் நாமம் அறிவு முதிர்ச்சி இல்லாத வகையினரிடம் இருந்து கற்றறிந்தோர்வரை பரவியுள்ளது. இந்தச் சுழிப்பிலிருந்து தப்பிப்பிழைத்தாலும், நாமத்தினால் வரும் கேடு, தத்துவம், அரசியற் சமூகவியற் கொள்கை முதலியவற்றிலுமே புகுந்து விடுகிறதென்பதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

நான் வேளாளன், தமிழன், இந்து, இலங்கையன் என்ற நாமம் நாம் விரும்பாது நம்சூழலால் அளிக்கப்பட்டது. இந்த நாமம் நம் கீழ்ப்படி வாழ்வைப் பிரதிபலிக்கின்றது. இந்த நாமங்களுக்கு ஒழுக்கங் கற்பித்து ஒரு பண்பு கொடுத்து அதிலே ஒரு பெருமிதம் கொள்வதால் நாமத்தினால் வரும் கேடு அழிந்துவிடாது. ''தமிழென்றால் அமிழ்து'' என்று சொன்னால் பேசுவது யாவர்க்கும் அமிழ்தாகப் பேசுகிறோமா? இல்லை. சைவம் என்றால் அன்பு என்கிறோம். அன்பினையா மதமாகப் பின்பற்றுகிறோம். இல்லை.

இங்கும் முதன்முதலாக இருந்த ஓர் இடுகுறி நாமங் கெட்டுப் பண்பினலாய ஒரு நாமம் எழுவதை நாம் காண்கிறோம்.

இனி இரண்டாம் படி நிலையிலிருக்கும் ஒரு நாமத்திற்கு வருவோம். இது சமயமும் கலந்த பண்பினது. பெருவளவில் அரசியல், சமூகவியற் கொள்கைகளாலும் தத்துவங்களாலும் எழுவது. மக்களாட்சி, சமதர்மம், பொதுவுடைமை, புரட்சி, என்பன போன்ற நாமங்கள் இங்கு வழங்குவன. ஓரளவிற்கு அறிவில் உயர்ந்த மக்கள், முன் தாம் கொண்டிருந்த, தமிழன், சைவன், பிள்ளை, என்ற நாமங்களைக் கெடுத்து இப்பொழுது பொதுவுடைமைவாதி, மக்களாட்சிவாதி என்று நாமங்களைச் சூட்டிக் கொள்கிறார்கள். இரண்டு சந்தர்ப்பங்களிலும் அமைந்தது நாமங்களே.

மனிதனின் அறிவு வளர்ச்சி வரலாற்றிலே நாமம் பற்றிய ஒரு பண்பினை நாம் இங்கு காண்கிறோம். பிறவியினால், சூழலால், வேறு பல சந்தர்ப்பங்களினால் எழுந்த நாமங்களை அறிவுடையோர் அழித்து தத்துவத்தால், கருத்துயர்வால் புதிய நாமங்களைச் சூட்டிக் கொள்கிறார்சள் என்பது அந்தப் பண்பு. முந்திய நாமங்கள் மனித குலத்தைத் தற்செயலான பண்புகளால் பிரித்து நிற்பதை அறிந்தே சில கற்றறிவாளர் கருத்துக் கொள்கையினலாய நாமங்களை இப்பொழுது சூட்டிக் கொண்டனர். இதனால் நடந்தது என்ன? முந்தி இருந்த பிரிவிற்குப் பதிலாகப் பிறிதொரு பிரிவை நாம் காண்கிறோம்.

இப்பிரிவுகள் நாமங்களால் வந்தன. நாமங்கள் எப்படி எழுந்தால் என்ன? அவற்றில் எங்களுக்கொரு விருப்பமிருக்கிறது. எம்முடைய நாமத்தில் விருப்புத் தோன்ற மற்றையவர் நாமத்தில் நமக்குப் பகை தோன்றுகிறது. என்ன அறக் கருத்தோடு புரட்சிவாதி என்றோமோ, அதனை மறந்து நாமத்திலேயே ஒரு அளவிலாத அபிமானம் தோன்றிவிடுகிறது. பயன் என்ன? பகைமையும் சினமுந்தான்.

நாமத்தை நாம் மறந்துவிட வேண்டும். என் நாமம், அவன் நாமம் என்று பார்த்து நாமங்களுக்கு அப்பால் அதிகாரமாக நிற்கும் மனித தர்மத்தை நோக்க வேண்டும்.

அவனுடைய நாமத்தைக் கழற்ற முன் தன்னமம் கெடவேண்டும். ஒரு நாமமும் இல்லாத ஒரு பேரிலட்சியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். 'சர்வோதயம்' அந்தப் பேரிலட்சியம். ''நான் சர்வோதய வாதி'' என்பது ஒரு நாமமாகும்.

— இ. இரத்தினம்

## அறிவிப்பு

காந்தி புகைப்பட, சர்வோதய இலக்கிய கண்காட்சியை நடத்த விரும்பும் அன்பர்களும், பொது நிறுவனங்களும் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கௌரவ நிர்வாகி,

சர்வோதய நிகேதனம்,

காந்தீயம்

ஆண்டுக்கட்டணம் ரூபா 2.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப்பணிக்கு அழைப்பு

## சர்வோதய வழி நடைப் பாட்டு

ஆற்றல் மிக்க வீரனே! அமைதி காக்கவா!
அமைதி காக்கவா; ஆண்மை நிகழ்த்தவா!

அணிவகுத்து நின்றிடு, அமைதி ஓங்க என்றிடு,
துணிவு கொண்டெழுந்திடு, துயர் துடைக்க வந்திடு!

பணிவு மன்பும் கொண்டுவா, படைக்கலம் வேறென்றிலை;
பிணியை யொத்த ஆசை அச்சம், ஐயம் கோபம் விட்டுவா!

பூசல் ஏசல் பூத்து மேலும், பொங்கி நிற்கும் சூழலில்
வீசும் கோப வெப்பத்துள்ளே, வீழ்ந் தெழுந்து செல்லணும், (ஆற்றல் மிக்க)

வர்க்க ஜாதி பேதம் மற்றும், வறுமையாதி துன்பங்கள்,
தர்க்க ரீதியாக நிற்கத் தகுதி சற்றும் இல்லைதான்

நீண்டகாலத் தீமைகள், நிலைத்து நின்று வந்தவை
மூண்ட கோபத்தாலே இன்று முற்றும் நீங்கிப் போகுமோ?

நாமெல்லோரும் ஒத்துழைத்து நடத்தி வந்த தீமைகள்
தாமெலிந்துடைந்து நைந்து தகரும் மார்க்கம் காணுவோம்.

ஒத்துழைப்பை நல்கிடோம், ஒதுங்கி மாறிச் செல்லுவோம்
செத்து வீழ நேரும் காண், சிதைந்து இந்தத்தீமைகள், (ஆற்றல் மிக்க)

நன்மை சேரக் கூடுவோம், நாட்டிற் குழைக்க நாடுவோம்;
வன்முறைச் செயல் மறுத்து; வளம் பெருக்கத் தேடுவோம்.

ஒன்று பட்டு இயங்குவோம், நம் ஊர் சிறந்து ஓங்கிட,
நன்று தீது தேர்ந்து நாடு, நல்ல பாதை ஏற்றிட;

அன்புமார்க்கம் ஒன்றுதான், நல் ஆக்கம் காக்கும் மார்க்கமாம்
கொன்று தீர்க்கும் போக்கன்று, கோரம் யாவும் நீங்கிட

சாந்தி சேனை யென்பது சர்வோதயம் வளர்ப்பது
காந்தி சென்ற பாதை நின்று, கருணை ஓங்கச்செய்வது. (ஆற்றல் மிக்க)

கருணை போற்று நற்பணியைக் கதர் இயக்கம் குறிப்பதால்
கருத்து மிச்க புரட்சி சேர்க்கும், காரியத்தின் சின்னமாம்

கிராமம் ஐக்கியம் உற்றிடில் கீழ்மைகள் தகர்ந்துபோம்,
கிரமமாக தொழில் வளர்ந்து கூடிவாழ எண்ணுவோம்.

கிராமதானம் என்பதே கிராம ராஜ்ய ஸ்தாபிதம்,
இராம ராஜ்ய மென்று காந்தி, கண்ட கனவும் அஃதுதான்.

இந்த நல்ல கனவினை நாம் இயக்கிச் சென்று செயல்பட
ஏற்ற பேரழைப்பு ஒன்றே, இன்று இங்குவிடுப்பது (ஆற்றல் மிக்க வீரனே!)

தொகுப்பு: காதிராஜன், ஆற்காடு சர்வோதய சங்கம், திருப்பத்தூர்.

## வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [1970 ஏப்ரில், மே] வரவு செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 330 | 32 |
| சர்வோதயபாத்திரம் | 8 | 82 |
| சம்பத்துத்தானம் | 46 | 01 |
| விடுதிக்கட்டணம் | 60 | 00 |
| காந்தீயம் | 208 | 00 |
| அரிசி | 76 | 05 |
| மொத்தம் | 729 | 20 |

| செலவு | ரூபா | சதம் |
|---|---|---|
| உணவு | 118 | 72 |
| பிரயாணம் | 55 | 45 |
| தபால் | 12 | 04 |
| சலவை | 7 | 37 |
| சலூன் | 3 | 00 |
| மாணவர் செலவு | 59 | 59 |
| வெளிச்சம் | 33 | 20 |
| அச்சகம் | 228 | 80 |
| காந்தீயம் | 45 | 00 |
| நாளுவிதம் | 9 | 45 |
| வயித்தியம் | 2 | 15 |
| கமம் | 1 | 12 |
| கோகுலம் | 14 | 12 |
| உபகரணம் | 5 | 50 |
| கட்டடம் | 11 | 00 |
| கைச்செலவு - சம்பளம் | 3 | 00 |
| ஏற்ற இறக்க | 3 | 00 |
| மொத்தம் | 612 | 51 |

## வருந்துகிறோம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் முன்னாள் உப தலைவரும் சுன்னாகம் ஐயனார் கோவில் பலி ஒழிப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கி வெற்றி கொண்டவரும் பல சமூக சீர்திருத்த பணிகளில் ஈடுபட்டு உழைத்தவருமான திரு. ஆ. மார்க்கண்டன் சில மாதங்களாக நோய்வாய்ப் பட்டு 3. 4. 70 இல் காலமானார். அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு கதர் ஆலோசகர்



இலங்கையில் கதர் வேலைகளை ஆரம்பிக்கவும் ஆலோசனை கூறவும் இந்திய கதர் நிபுணர் காதி ஏ. என். ராஜன் அவர்களை கௌரவ கதர் ஆலோசகராக அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் நியமித்துள்ளது.

## சம்பத்துத் தானம்

சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத்தானம் அளித்தவர்கள்.

| | ரூ | ச |
|---|---|---|
| திருமதி. ம. குமாரசாமி. 7, மல்வத்த அவென்யூ நுகேகொட. | 5 | 00 |
| செல்வன். சஞ்சீவன் சிவலிங்கம். 7, விவேகானந்தா அவென்யூ. வெள்ளவத்தை. | 10 | 00 |
| திருமதி. சாம்பசிவம். 11, பிரேங்போட் பிளேஸ் கொழும்பு—4 | 2 | 00 |
| திரு. சிசு. நாகேந்திரன் பிரான்சிஸ் வீதி கொழும்பு—6 | 10 | 17 |
| திரு. க.சுந்தரலிங்கம் அராலி—மேற்கு வட்டுக்கோட்டை | 2 | 00 |

## செய்திகள்

தெகிவளை-தமிழ்ப்பாடசாலை சர்வோதய பாத்திர இயக்கம் மூலம் 43 கொத்து அரிசி கிடைத்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★

சர்வோதய பாத்திரங்கள் மூலம் ஏப்ரில் மாதத்தில் 98 வீடுகளிருந்து 67 கொத்து அரிசியும் 6 ரூபா 39 சதமும் பெறப்பட்டது.

---

இளைஞர்களே!

உங்களுக்குத் தொழில் இல்லையென கவலை ஏன்?

★ கமம்
★ நெசவு
★ தும்பு
★ அச்சு
★ தையல்
★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம் (தபால்
அல்லது
சர்வோதய நிகேதனம்
இந்துக் கல்லூரிச் சதுக்கம்
இரத்மலானை.

PEOPLE'S ACTION
SARVA SEVA SANGA
NEWS LETTER
PUBLISHED ON THE FIRST
DAY OF EVERY MONTH
SARVA SEVA SANGH
RAJGHT : VARANASI 1
INDIA
IN CEYLON
Gandhi Nilayam
Uruthirapuram

## ஊழியருக்குப் பயிற்சி

உருத்திரபுரம் — காந்தி நிலையம், இரத்மலானை — சர்வோதய நிகேதனம் ஆகிய நிறுவனங்களில் ஊழியருக்குப் பயிற்சியளிக்கும் திட்டமொன்றைக் காந்தி சேவா சங்கம் செயற்படுத்த முன்வந்துள்ளது. பயிற்சியில் 16—20 வயது ஆண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிற்சியின் போது ஊழியரிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. உணவும் இருப்பிடமும் இலவசமாக வழங்கப்படும்.

சுமார் ஒரு வருட காலம் பயிற்சி அளிக்கப்படும். ஊழியர் நாள் தோறும் இரண்டு மணித்தியாலங்களுக்குக் குறையாமல் உடலுழைப்புச் செய்ய வேண்டும். இதில் கமம், சமையல், சுத்தஞ் செய்தல் அடங்கும். ஒவ்வொரு ஊழியருக்கும் ராட்டையில் நூற்கப் பயிற்சியளிக்கப்படும். இதோடு கமம், மரவேலை, அச்சுவேலை, தையல் வேலை, தும்பு வேலை ஆகிய துறைகளில் தாம் விரும்பியவற்றில் பயிற்சி பெறலாம்.

பயிற்சிக் காலம் முடிவடைந்ததும் ஊழியருக்குத் தொழில்தேடிக்கொடுக்கப்படும். தெரிவு செய்யப்படும் ஊழியர் மேலும் பயிற்சி பெறுவதற்காக இந்தியாவிலுள்ள சர்வோதய ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்படுவர். பூரண பயிற்சியின் பின் காந்தி சேவா சங்க ஸ்தாபனங்களை நடத்தும் பொறுப்பு ஊழியரிடம் கையளிக்கப்படும். இவர்களுக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். மேலும் விபரம் தேவைப் படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம். கௌரவ நிர்வாகி, காந்தி நிலையம், உருத்திரபுரம்.

---

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி.க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்திசேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்புமெய்கண்டான் அச்சக லிமிட்டெட்டில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org